# *புகழ்ச்சிக்கூட்ட நற்செய்தி*

## 2017 புரட்டாதி மாதம் 18 திகதி முதல் 24 திகதி வரை

**"அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்."** (புனித மத்தேயு 5:9)

01. புகழ்ச்சிக்கான அறிமுகம் :

- மங்களமான வார்த்தை என்பது இயேசு கிறிஸ்து ஆண்டவரின் தர்மொபதேசத்தின் கருத்தாகும். மலைப் பிரசங்கத்தின் வாயிலாக அவர் இறை அரசின் ஞான ஒளியினை வெளிப்படுத்தியுள்ளார். பேறுபெற்ற நிலைகள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வாழ்வின் அனுபவமாகும்.
- இயேசு கிறிஸ்து ஆண்டவர் இவ்வாறாக தன் வாழ்வின் நோக்கினை கிறிஸ்தவ சீடர்களாகிய எமக்கு பரிசாகத் தந்தவாறு, ஆபிரகாம் முதல் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களுக்கு கொடுத்த விண்ணக வாக்குறுதியை முன்கொண்டு ஆண்டவருக்கு எமது நமஸ்காரத்தையும் புகழ்ச்சியையும் அர்பணிப்போம்.

02. கடந்தவார புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தியை முன்கொண்டு அனுபவங்களை பகிாந்து கொள்ளவும்.

- கடந்தவார எமது தலைப்பு "தூய்மையான உள்ளதோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்."
- பொதுவில் பகிர்ந்துக் கொண்டு சிறு புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்.

03. நாளுக்குரிய நற்செய்தி
புனித முத்தேயு 5:9 பகுதியை பொதுவாக வாசித்து சிறு குழுக்களுக்குள் கலந்துரையாடியவாறு கிடைக்கும் ஒளியினை பகிர்ந்து கொள்ளவும்.

04. நற்செய்தியை கட்டியெழுப்புவதற்காக

- ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் அனைத்தும், செயல்பாடுகள் அனைத்தும் அவரது பரிசுத்தமான அன்பினை அனுபவிப்பதற்கான அழைப்பே ஆகும் அவ்வாறே மேல் குறிப்பிட்டுள்ள நற்செய்தி வழியாகவும் அவரது பரிசுத்தமான விருப்பம் எமக்கு வெளிப்பாடாக்கப்பட்டுள்ளது.
- இவ்வுலகின் அடிமைத்தன பந்தங்களுக்குக் கீழே அடிமையாகி இருக்கும் மனிதன் தேடும் உண்மையான அமைதி இருப்பது இயேசு கிறிஸ்து ஆண்டவரிடம் மாத்திமே. அவரது பரிசுத்த திருவுளத்திற்கு தாகமுள்ள, அதற்கு அன்பு செய்கின்ற மனிதன் நிலையான அமைதியை உரிமையாக்கிக் கொள்வான். தனி மனிதனுக்கு, குடும்பத்திற்கு, சமூகத்திற்கு முழு உலகத்திற்குமே அமைதியை அனுபவிக்கும் தாகம் ..பதில் ஆண்டவரே.
- பேரிய வெள்ளிக்கிழமைக்கு முன் தினம் அவர் தனது சீடர்களுக்கு அமைதியைத் தருவதாக வாக்குறுதி அளித்தார்.
- புனித யோவான் 14:27 "அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன். என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்கத் தரும் அமைதி

உலகம் தரும் அமைதி போன்றது அல்ல. நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம் மருள வேண்டாம்''

05. எம் பேரில்

- அமைதி என்பது பிரார்த்தனை அல்ல தூய ஆவியானவரில் தஞ்சமடைவதில் எமக்குக் கிடைக்கும் கொடை. பலவித பிரச்சினைகள், சவால்கள் மத்தியில் கலங்காதிருப்பதற்கு கிடைக்கும் புதுவித பலம்.
- இறை அன்பின் பரிசு அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளில் ஆண்டவர் மட்டில் விசுவாசத்துடன், எதிர்பார்புடன் இருந்து அவர் அன்பினை அனுபவித்தல்

06. வாரம் முழுவதும்.

- எமது மனதை கலங்கவைக்கின்ற எதிர்பாராத நிகழ்வுகளினுள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்திற்கு விழிப்புறுவோம் இறை விருப்பத்தை தேடுவோம்.
- ஏழை மாட்டுத் தொழுவத்தில் பிறந்த சத்தியவான் உலகிற்கு அமைதியை ஏற்படுத்தியது போல் நாமும் மாட்டுத் தொழுவத்தில் நுழைந்து ஆண்டவரது பரிசுத்த திட்டம், விருப்பம் என்ன என்று தியானிப்பொம். அமைதியை அனுபவித்தவாறு அதற்கு சாட்சி பகிர்வோம்.

07. இறுதி புகழ்ச்சி

புபுது பாடல் இல. 124 " அமைதியின் மகிழ்ச்சியின் இறைவனே….."